# இயல் 6.3 - விகிதம்

பயிற்சி எண் :: 6.3.1.1.D

## விகிதம் - அளவு - வினா எண் :: 1

அமுதனின் தாயார் அவர்கள் வீட்டு உபயோகத்திற்கு, காலையில் 1.2 லிட்டரும் மாலையில் 700 மி.லிட்டரும் பால் வாங்குவார். இவ்விரு அளவுகளுக்கும் இடையில் உள்ள விகிதம் யாது?

---

கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களும் பாலின் அளவையே குறிக்கின்றன. ஆனால் அவை ஒரே அலகில் கொடுக்கப்படவில்லை. ஒன்று, லிட்டரிலும் மற்றொன்று, மி.லிட்டரிலும் உள்ளன. எனவே, முதலில் அவற்றை ஒரே அலகுடைய எண்களாக மாற்ற வேண்டும். அவற்றுள், லிட்டரில் கொடுக்கப்பட்டுள்ள அளவை மி.லிட்டராக மாற்றுவது எளிது.

---

$$1.2 \text{ லிட்டர்} = 1,200 \text{ மி.லிட்டர்}$$

இரு அளவுகளுக்கும் இடையே உள்ள விகிதம்

$$1200 : 700$$

$$12 : 7$$

---

விளக்கம்

$$\frac{1200}{700} = \frac{12\not{0}\not{0}}{7\not{0}\not{0}} = \frac{12}{7}$$

## வினா எண் :: 1-ன் விடை

இரு பாலின் அளவுகளுக்கு இடையில் உள்ள விகிதம் **12:7** ஆகும்.

Sum & solution prepared on Saturday 15th May, 2021 :: 04:17 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.